265—

SALE OF OLD BUSES AT CONCESSIONAL RATES

*** 22808—Dr. Beatrix D' Souza:**

Will the Hon. the Mininster for Transport and Forests be pleased to state–

Whether there is any proposal with the Government to sell old transport undertaking buses at concessional price to Women's Organisations and other Non-Government Organisations?

மாண்புமிகு திரு. கே.ஏ செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

Dr. Beatrix D' Souza: Honourable Speaker, Sir, It will be of great help if Women's organisations who run Old-age homes, canteens and orphanages, if they can buy these buses at concessional rates. If the Government cannot consider selling them outright, will the Government consider atleast hiring these buses to N.G.Os., whenever necessary?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லையென்று சொல்வதற்கு காரணம் கல்வி நிலையங்களுக்கு மட்டும்தான் இந்தப் பேருந்துகளை அரசு நிர்ணயிக்கின்ற விலையிலே தந்து கொண்டு இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களைப் போன்ற சமூகநல சேவை செய்பவர்களுக்கும் அரசின் நிர்ணயித்த விலையிலே மீண்டும் தருவார்களா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.து. வரதராஜன்.

திரு. செது. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இராணுவ முகாம்களில் இருந்து பழைய பேருந்துகளை எம்.எல்.ஏக்கள் எம்.பி.க்கள் போன்றவர்களுக்கு சலுகை விலையிலே விற்பனை செய்து கொடுப்பதைப் போல தமிழக அரசும் நம்முடைய எம்.எல்.ஏ.க்களுக்கு போக்குவரத்து நிறுவனங்களிலுள்ள பழைய பேருந்துகளை சலுகை விலையிலே கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 7

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை விலையிலே பேருந்து வழங்குவது என்றால் அதிலே ஊழல் குற்றச்சாட்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கல்வி நிறுவனங்கள் ஏதாகிலும் இருக்குமானால்—உறுப்பினரே நடத்தினாலும் சரி, அல்லது அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தினாலும் சரி, அல்லது அவருக்கு வேண்டியவர்கள் நடத்தினாலும் சரி, அதற்குரிய பரிந்துரையைச் செய்தால் பேருந்துகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 266, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

266—

திட்டச்சேரி-குத்தாலத்திற்கு பேருந்து இயக்குதல்

*** 23256**—*திருமதி கே. பஞ்சவர்ணம்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், திட்டச்சேரியிலிருந்து குத்தாலத்திற்கு நரிமணம் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை தடத்தில் நரிமணம் குறுக்கு ரோட்டிலிருந்து புறாக்கிராமம் வரையிலுள்ள 8 கி.மீ. தூரம் பேருந்து வசதி பெறாத கிராமப் பகுதியாகும். எல்லா காலங்களிலும் பேருந்து இயக்குவதற்கேற்ற வகையில் சாலை அமையவில்லை. எனவே, மழைக்காலங்களிலும் பேருந்து இயக்குவதற்கேற்ற சாலையாக சான்றளிக்கப்படாததன் காரணமாக பேருந்து இயக்க இயலவில்லை.

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், மக்களின் அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து கொண்டிருக்கின்ற, மக்களாட்சி நடத்திவரும்